சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்

**O.S. No. 80/2016**

2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ம் நாள் வெள்ளிக்கிழமை 2 முதல் 4 பிரதிவாதிகள்தரப்பு சாட்சியமாகிய **அகமது ஜலாலுதீன் DW1** வாக்குமூலம் 1869 ஆம் ஆண்டின் 44 வது சட்ட விதிகளின் படி / ஏற்பாட்டின்படி திரு.கே.சீனிவாசன்,எம்.ஏ.,எல்.எல்.எம்., சார்பு நீதிபதி நாகப்பட்டினம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **பெயர்** | **அகமது ஜலாலுதீன்** | கிராமம் |
| வயது | | தாலுக்கா |
| தகப்பனார் பெய ர் | | ஜாதி |
| கணவர் பெயர் | | சமயம் |
| தொழில் | | |

17.11..2023

**முதல் விசாரணை**

நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். இதில் உள்ளது எனது கையெழுத்துத்தான். இதனை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ள கேட்டுக் கொள்கிறேன். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். 02.08.2023 தேதியிட்ட கீழ்வேளூர் வட்டாட்சியர் வழங்கிய தாவா சொத்திற்குரிய "அ " பதிவேடு உண்மை நகல் ( வாதி தரப்பு வழக்கறிஞர் மேற்படி ஆவணத்தை குறியீடு செய்ய ஆட்சேபணை செய்தார். மேற்படி ஆவணத்தின் நம்பகத்தன்மை பொறுத்து இறுதியில் முடிவு செய்யும் பொருட்டு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) **பி.வா.சா.ஆ. 1** ஆகும். 02.08.2023 தேதியிட்ட கீழ்வேளூர் வட்டாட்சியர் வழங்கிய தாவா சொத்திற்குரிய புல வரைபடம் எண்ணிக்கை - 5 ( வாதி தரப்பு வழக்கறிஞர் மேற்படி ஆவணத்தை குறியீடு செய்ய ஆட்சேபணை செய்தார். மேற்படி ஆவணத்தின் நம்பகத்தன்மை பொறுத்து இறுதியில் முடிவு செய்யும் பொருட்டு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) **பி.வா.சா.ஆ.2** ஆகும். எனது வாக்குமூலத்தை ஏற்றுக்கொண்டு வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய பிரார்த்திக்கிறேன்.

**குறுக்கு விசாரணை** .

( வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைத்து உத்தரவிடப்படுகிறது)